**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2025-ம் வருடம் செப்டம்பர் மாதம் 03-ம் நாள் புதன்கிழமை**

**(2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் ஆவணி மாதம் 18-ம் நாள்)**

**I.A.No.11 / 2025 in O.S.232 / 2016**

பெருமாள்கவுண்டர்
மற்றும் 11 நபர்கள் ......... மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

/எதிர்/

வெள்ளையம்மாள்
மற்றும் 9 நபர்கள் ..... எதிர்மனுதாரர்கள் / வாதிகள்

இம்மனுவானது 01.09.2025 அன்று என் முன்னிலையில் இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.எம்.சண்முகம் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.பாலகிருஷ்ணன் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8, விதி 3 பிரிவு 151 ன் படி மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை மன்னித்து ஏற்றுக்கொண்டு உத்தரவு பிறப்பிக்கக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்.**

அசல் வழக்கானது, எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது விளம்புகை, பாகப்பிரிவினை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது, சில ஆவணங்கள் விடுபட்டுவிட்டது. மேற்படி ஆவணங்கள் மிகவும் அவசியமான ஒன்றாகும். எனவே, ஆவணங்களை குறியீடு செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினை மன்னித்து ஏற்றுக் கொண்டு உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்மனு உரையின் சுருக்கம்.**

மனுதாரரின் மனு மோசடியானது, நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தரப்பில் தற்போது தாக்கல் செய்திருக்கும் ஆவணத்தை 21.12.2016-ம் தேதியிலேயே சான்றுநகல் பெற்று, மனுதாரர்கள் வசம் வைத்துக் கொண்டுள்ளார்கள். மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள விவரப்பத்திரிக்கையில் மேற்படி ஆவணத்தைப் பற்றி குறிப்பிடவில்லை. மேற்படி கிரைய ஆவணம் எவ்வகையில் தங்கள் வழக்கிற்குத் தேவையானது என்பதனை மனுதாரர்கள் குறிப்பிடவில்லை. மனுதாரர்கள் வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, மனுவானது எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**3.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு**

**5.1** இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது, எதிர்மனுதாரர்கள் / வாதிகள் தரப்பில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது விளம்புகை, பாகப்பிரிவினை மற்றும் சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போது, சில ஆவணங்கள் விடுபட்டுவிட்டதாகவும், மேற்படி ஆவணங்கள் மிகவும் அவசியமானது என்றும், எனவே, ஆவணங்களை குறியீடு செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினை மன்னித்து ஆவணங்களை ஏற்றுக் கொள்ளமாறு வேண்டப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில், தாவாச் சொத்திற்கும் மனுதாரருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், தற்போது தாக்கல் செய்திருக்கும் ஆவணத்தை 21.12.2016-ம் தேதியிலேயே சான்றுநகல் பெற்று, மனுதாரர்கள் வசம் வைத்துக் கொண்டுள்ளார்கள் என்றும், மேற்படி ஆவணம் வழக்கிற்குத் தேவையற்றது என்றும், எனவே, மனுவானது தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

**5.2** இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் காலதாமதமாக தாக்கல் செய்யப்படுவதற்கு மனுதாரரால் இந்நீதிமன்றம் திருப்தி கொள்ளும் வகையில் காரணங்கள் சொல்லப்பட்டுள்ள நிலையிலும், மேலும் மனுதாரர்களுக்கு அவர்களது தரப்பு வழக்கை நிரூபிப்பதற்கு போதிய வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று முடிவு செய்கிறது. நீதியின் நலனை

கருத்தில் கொண்டு இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்புகளும் ஏற்படப்போவதில்லை என்பதாலும், ஆவணங்களின் செல்லும் தன்மை மற்றும் தொடர்புடைமை (Subject to Relevancy and Admissibility) அடிப்படையில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**6. முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 03-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2025.09.03 11:01:20 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**<u>இருதரப்பிலும் சாட்சி சான்றாவணங்கள்</u>**

**<u>தாக்கல் இல்லை</u>**

SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2025.09.03 11:01:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

**FAIR ORDER**

**I.A.11/2025**

**in**

**O.S.232/2016**

**03.09.2025**